நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 171/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவிக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | அம்மாசி |
| கிராமம் | : | கீழ்குள்ளவீரன்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 08–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.15 PM

1. நான் சிவில் இன்ஜினியராக தொழில் செய்கிறேன். நான் டிப்ளமோ படித்துள்ளேன். கடந்த 2010 ம் வருடம் வரை அனல் மின்நிலையத்தில் பணிபுரிந்தேன். அதன்பிறகு தற்போது தனியாக சிவில் இன்ஜினியரிங் தொழில் செய்து வருகிறேன். நான் நிரந்தர ஊழியராக பணிபுரிந்தேனா என்றால் இல்லை.

ஒப்பந்ததாரரிடம் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தேன்.

2. கடந்த 16 ஆண்டுகளாக வீடுகட்டி விற்பனை செய்து வருகிறேன். சுமார் 25 வீடுகள் வரைகட்டி தற்போது வரை விற்பனை செய்துள்ளேன். நான் வருமான வரி செலுத்துவதில்லை. ஆட்களை வைத்து வேலை செய்கிறேன். தனியாக கணக்குகள் எதுவும் பராமரிக்கவில்லை. சுமார் 10 நபர்கள் என்னிடம் வேலை செய்கிறார்கள்.

3. ஆஜர் எதிரி நெடுஞ்சாலை துறையில் பணிபுரியும் ஓட்டுநர் மாதையன் என்பவர் மூலம் எனக்கு பழக்கம். எனது நண்பர்களுக்கு யாருக்காவது கடன் கொடுத்து வாங்கியிருக்கேனா என்றால் இல்லை. எதிரிக்கு மட்டும்தான் கொடுத்துள்ளேன். எதிரியின் சரியான சொந்தஊர் எனக்கு தெரியாது. சேலம் மாவட்டத்தை சேர்ந்தவர்.

4. 2019 ம் ஆண்டில் இருந்து எனக்கு எதிரி பழக்கம். இதற்கு முன்பாக எதிரி ரூ.10000/–, ரூ.20000/– என கைமாற்று கடன் வாங்கியுள்ளார். எனக்கு 2 வங்கிகளில் சேமிப்பு கணக்கு உள்ளது. 15.12.2024 ம் தேதி நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். அதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு என்னிடம் பணம் கேட்டிருந்தார்.

5. எனது சொந்த வீட்டை விற்பனை செய்து வைத்திருந்த தொகையை எதிரிக்கு கடனாக கொடுத்தேன். நான் வட்டி எதுவும் கேட்கவில்லை. கைமாற்றாகத்தான் கடன் கொடுத்துள்ளேன். புரோ நோட் எழுதிக்கொடுக்க சொல்லி நான் கேட்கவில்லை. நான் கடன்தொகையை ரொக்கமாகத்தான் கொடுத்தேன்.

6. ரூ.20000/– ற்கு மேல் ரொக்கமாக பணம் பரிவர்த்தனை செய்யக்கூடாது என்ற விதி எனக்கு தெரியாது. மாதையன் சொல்லி நான் பணம் கொடுக்கவில்லை. நானாகத்தான் பணம் கொடுத்தேன். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரி என்னிடம் எந்த பணமும் கடன் வாங்கவில்லை என்றாலும் நான் சொன்னவாறு காசோலை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7. நான் சொன்ன மாதையன் என்னிடம் கடன் வாங்கியிருந்தார் என்றாலும் அந்த

தொகைக்கு ஆதரவாக எதிரி காசோலை கொடுத்திருந்தார் என்றாலும் அதை பயன்படுத்தி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தனியார் கடன்களை அடைப்பதற்காக என்னிடம் பணம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் வாங்கியதும் அவ்வாறான தனியார் கடன்தான் என்றாலும் சரிதான்.

8. மொத்தமாக ரூ.5 இலட்சத்தை கடனாக கொடுப்பதற்கு எனக்கு நிதி ஆதாரம் இல்லையென்றால் சரியல்ல. வீட்டை விற்ற பணத்தை வைத்துதான் கடன் கொடுத்தேன். அதற்கான ஆவணம் உள்ளது. காசோலையை ஏற்கனவே பூர்த்தி செய்து எடுத்துவந்து என் முன்னிலையில் கையெழுத்து மட்டும் போட்டார். பூர்த்தி செய்து காசோலையை எடுத்து வந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பூர்த்தி செய்யப்படாத காசோலையைதான் என்னிடம் கையெழுத்திட்டு கொடுத்தார் என்றாலும் அதில் நான் விவரங்களை நிரப்பி தவறாக பயன்படுத்தி கொண்டேன் என்றாலும் சரியல்ல.

9. யார்யாரிடம் கடன் பெற்றிருக்கிறார் என்ற விவரம் அவர் என்னிடம் சொல்லவில்லை. சட்டப்படியான கடனுக்காக இந்த காசோலை வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியே பணம் கட்டுவதாக நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். எதிரி அவ்வாறு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**